DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 456/2023 |
| Prosecution: | அ.சா.5 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சங்கீதா |
| **Father Name** | ~ | வர்கீஸ் குமார் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of**

**Dt. 25.06.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பள்ளிக்கரணை பகுதியில் வசித்து வருகிறேன். நான் தற்போது டெய்லர் கடை வைத்துள்ளேன். கடந்த 18.7.2014 அன்று இரவு 9 மணி அளவில் எனது தம்பி அ.சா.1 பிரதீப்குமார், எனது தம்பி மனைவி அ.சா.2 சிவசக்தி. எனது தாயார் அ.சா.3 மனோன்மணி மற்றும் எனது குழந்தைகள் ஆகியோர் திருநீர்மலை வேம்புலி அம்மன் கோவில் தெருவில் உள்ள எனது தாயார் வீட்டில் இருந்த போது ஏற்கனவே வழக்கில் தாக்கல் செய்தது தொடர்பாக பேசி கொண்டு இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. அங்கு வந்த எதிரிகள் ஜெயந்தி, ராஜகோபால்,ஸ்ரீதர் , ரூபன், கண்ணதாசன் ஆகியோர் எங்களது வீட்டின் உள்ளே புகுந்து எனது தம்பி அ.சா.1யை அடித்தார்கள். தடுக்க சென்ற என்னையும் எதிரி ராஜகோபால் தலைமுடியை பிடித்து அடித்தார்.

மேலும், உருட்டுக்கட்டையை கொண்டு எனது தம்பியை அடித்தார்கள். எங்களை மிரட்டிவிட்டு சென்றார்கள். காயம்பட்டவர்களை மருத்துவமனை சிகிச்சைக்காக

அனுப்பி வைத்தோம். எனது தம்பி அளித்த புகாரின் அடிப்படையில் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எவ்வளவு ஆண்டுகளாக பள்ளிக்கரணையில் வசித்து வருகிறேன் என்றால் எனக்கு திருமணம் செய்து கொடுத்த 2007 முதல் வசித்து வருகிறேன். ப.சா.4 துரைவேல் யார் என்றால் எனது தகப்பனார். அ.சா.1 பிரதீப் எனது பெரிய தம்பி. அ.சா.4 பிரவீன் எனது இளைய தம்பி. எதிரிகள் எனது தகப்பனாரின் பங்காளி உறவினர்கள் என்றால் சரிதான். எனது தந்தை வழி பாட்டனாரின் சொத்தில் எனது தகப்பனார் மற்றும் எனது தம்பிகள் கொட்டகை அமைத்ததால் 4ம் எதிரி ரூபன் என்பவரின் தாயார் 18.7.2014 அன்று சங்கர் நகர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி சொத்தை அபகரிக்க முயல்வதாக ரூபன் என்பவரின் தாயார் கொடுத்த புகாரின் விசாரணைக்காக எனது தகப்பனார் மற்றும் தம்பியை அழைத்ததால் தவறாக இவ்வழக்கில் புகார் மனு கொடுக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் எனது தம்பி கொட்டகை அமைத்ததை எதிரிகள் கேட்டதால் எனது தம்பிதான் எதிரிகளை தாக்கினார் என்றாலும் மேற்படி புகாரில் இருந்து தப்பிப்பதற்காக தவறாக இவ்வழக்கில் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எவ்வித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் மேற்படி சொத்தில் நுழையக்கூடாது என்பதற்காக எனது தம்பி கொடுத்த புகாரின் அடிப்படையில் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.